

# இடம் பொருள் கலைஞர்

99

**மகிழவன்**

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து, இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் **ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நிலம்!**







# ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நிலம்!

## விலையில்லாமல் வந்த நிலவுரிமை

இந்தியாவில் விவசாயம் என்பது வெறும் உணவுப்பொருள் உற்பத்திக்கானது மட்டுமல்ல. ஆதிக்கத்திற்கும் அடிமைத்தனத்திற்குமான கருவியாகவும் இருந்தது விவசாயம். நிலவுடைமையாளர்கள் ஆதிக்கவாதிகளாகவும், நிலமற்றவர்கள் கூலிகளாகவும், அடிமைகளாகவும் இருந்ததே, இந்தியச் சமூகத்தின் நீண்ட நெடும் வரலாறு. உற்பத்திக்கான உழைப்பைக் கொட்டுபவர்கள் நிலமற்ற கூலிகளாகவும், அந்த உழைப்பைச் சுரண்டி உபரியையும் சேர்த்து அள்ளிக்கொண்டவர்கள் நிலவுடைமை யாளர்களாகவும் இருந்தனர். அதுமட்டுமல்ல, நிலவுரிமை கொண்டிருந்தவர்கள், ஆதிக்கச் சாதியினராக இருந்தனர். நிலமற்றவர்கள் பிற்படுத்தப்பட்ட, பட்டியல் சமூகத்தினராக இருந்தனர். அதனால்தான் இந்தச் சமத்துவமற்ற விவசாய முறை, சமூகத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதாக, புரட்சியாளர் அம்பேத்கர் கருதினார். நிலமற்ற ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

### இலவச நிலம் வழங்கும் திட்டம்

நிலத்தின் மீது ஏகபோக உரிமைகளைக் கொண்டிருப்பவர்களுக்கு 1970-களிலேயே, நில உச்சவரம்புச் சட்டம், குத்தகைதாரர் சட்டத்தின் வாயிலாகக் கடிவாளம் போட்டவர், முத்தமிழறிஞர் கலைஞர். மறுமுனையில், புறம்போக்கு நிலங்களையும் ஆக்கிரமிப்பு நிலங்களையும் விவசாயக் கூலிகளின் கரங்களுக்குக் கொண்டு சேர்க்கும் புரட்சிகரத் திட்டமாக, நிலமற்ற விவசாயக் குடும்பங்களுக்கு நிலம் வழங்கும் திட்டத்தை உருவாக்கினார்.

1970-ஆம் ஆண்டு நில உச்சவரம்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி, பெரும் நிலவுடைமையாளர்களின் கைகளில் இருந்த நிலங்களை எளியவர்களின் கைகளுக்குக் கொண்டு சேர்த்தது, முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசு. அதன் தொடர்ச்சியாக, 2006-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வாக்குறுதியாக, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் இலவசமாக வழங்கப்படும் எனும் வாக்குறுதியைத் தந்து, தேர்தலில் களம் கண்டு வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.

2006-ஆம் ஆண்டு ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தேர்தல் வாக்குறுதியின்படி 2006-2007 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவசமாக நிலம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என சட்டப் பேரவையில் அறிவித்தார்.

### மேற்குவங்க மாநிலத்தில் ஆய்வு

இலவச நிலம் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பாக, அன்றைய வருவாய்த்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தலைமையில் அதிகாரிகள் குழு ஒன்று, 10.08 2006 அன்று மேற்குவங்கத்திற்குப் பயணம் மேற்கொண்டது. அம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட நில விநியோகத் திட்டம் குறித்து, நிலச் சீர்திருத்தத்துறை அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்தித்து, விவரங்களைக் கேட்டறிந்தனர்.

மேற்கு வங்கத்தின் மித்னாபூர் மாவட்டத்தில் பின்பற்றப்பட்ட நிலச் சீர்திருத்தம், நில ஒப்படைப்பு, நிலத்தைப் பண்படுத்துதல் போன்றவை குறித்து அந்த மாவட்ட ஆட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், வேளாண் துறை அலுவலர்கள், பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் ஆகியோருடன் விரிவாகக் கலந்துரையாடி, திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து, அறிந்து வந்து தமிழ்நாடு அரசுக்கு அறிக்கையைச் சமர்ப்பித்தனர்.

### நிலம் வழங்கும் வழிமுறை

எந்தவிதத்திலும் ஆக்கிரமிப்பு இல்லாத அரசு புறம்போக்கு நிலங்களையும், நிலமற்ற சிறு மற்றும் குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு, புறம்போக்கு நிலங்களையும் பண்படுத்தி மேம்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு, இலவசமாக வழங்க முடிவு செய்தது கலைஞர் அரசு. இலவச நிலம் வழங்கும் திட்டத்தின் பயனாளிகளைத் தேர்வு செய்வதில் அரசு ஒளிவு மறைவின்றி வெளிப்படைத்தன்மையோடு செயல்பட்டு கிராம அளவில் குழு அமைத்தது. அதுமட்டுமின்றி, கிராம சபைகள் மூலம் பயனாளிகளைத் தேர்வு செய்து நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இத்திட்டத்தின்



கீழ் ஒருவருக்கு வழங்கப்படும் நிலத்தின் மீதான உரிமையை, அவர் வேறு ஒருவருக்கு மாற்றவோ அல்லது விற்பனை செய்யவோ குறைந்தது 30 ஆண்டுகளுக்குத் தடை விதித்து 26.08.2006 அன்று கலைஞர் அரசு ஆணை பிறப்பித்தது.

### இலவச நிலம் வழங்கும் திட்டம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தந்தை பெரியார் பிறந்த நாளான 17.09.2006 அன்று திருவள்ளூரில் 24 ஆயிரத்து 358 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 25 ஆயிரத்து 292.11 ஏக்கர் நிலத்தை முதல் கட்டமாக வழங்கி, திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக, விழுப்புரத்தில் 17.12.2006 அன்று 26 ஆயிரத்து 749 பேருக்கு 25 ஆயிரத்து 805.53 ஏக்கர் நிலமும், திருவண்ணா மலையில் 17.3.2007 அன்று 20 ஆயிரத்து 648



பேருக்கு 26 ஆயிரத்து 29 ஏக்கர் நிலமும், திருநெல்வேலியில் 17.6.2007 அன்று 19 ஆயிரத்து 821 பேருக்கு 24 ஆயிரத்து 505.86 ஏக்கர் நிலமும், புதுக்கோட்டையில் 17.9.2007 அன்று 24 ஆயிரத்து 932 பேருக்கு 32 ஆயிரத்து 65.61 ஏக்கர் நிலமும், ஈரோடு மாவட்டத்தில் 29.12.2007 அன்று நிலமற்ற 21 ஆயிரத்து 487 பேருக்கு, 26 ஆயிரத்து 982.62 ஏக்கர் நிலமும் வழங்கப்பட்டன. .அதனைத் தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் இலவச நிலம் வழங்கும் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

ஒட்டுமொத்தமாக திட்டம் தொடங்கப்பட்ட நாள்முதல் 15.02.2011 வரை 41 ஆயிரத்து 970 ஆதிதிராவிடர்களுக்கு 45 ஆயிரத்து 64.62 ஏக்கர் நிலமும், 3 ஆயிரத்து 277 பழங்குடியினருக்கு 3 ஆயிரத்து 872.46 ஏக்கர் நிலமும், 66 ஆயிரத்து 790 பிற்படுத்தப்பட்டோருக்கு 82 ஆயிரத்து 222.69 ஏக்கர் நிலமும், 58 ஆயிரத்து 269 மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 62 ஆயிரத்து 84.18 ஏக்கர் நிலமும், பிற வகுப்புகளைச் சேர்ந்த 8 ஆயிரத்து 692 பேருக்கு 19 ஆயிரத்து 750.65 ஏக்கர் நிலமும் என மொத்தம் ஒரு லட்சத்து 79 ஆயிரத்து

**ஒடுக்கப்பட்ட மக்களை, நிலவுடைமையாளர்கள் ஆக்கி, அதன்மூலம் சமத்துவ சமூகத்தைப் படைக்க வேண்டுமென்ற புரட்சியாளர் அம்பேத்கரின் கனவும் நனவானது.**

2 பேருக்கு, 2 லட்சத்து 12 ஆயிரத்து 994.60 ஏக்கர் நிலம் கலைஞர் அரசால், நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

காலம்காலமாக நிலங்களில் உழைப்பவர்களுக்கு அந்த நிலத்தின் மீது உரிமை கொள்ள முடியாமல் இருந்த நிலை மாறி, சொந்த நிலத்தில் உழுது, பயிரிட வேண்டுமென்ற ஏழை விவசாயிகளின் ஏக்கம் நிறைவேறியது. ஒடுக்கப்பட்ட மக்களை, நிலவுடைமையாளர்கள் ஆக்கி, அதன்மூலம் சமத்துவ சமூகத்தைப் படைக்க வேண்டுமென்ற புரட்சியாளர் அம்பேத்கரின் கனவும் நனவானது. கத்தியாலும், ரத்தத்தாலும் மட்டும் புரட்சி நிகழ்வதில்லை. அது சில வேளைகளில் கையெழுத்தாலும் நிகழும், என்பதை நிரூபித்தார் கலைஞர்!

...வலம் வருவோம்

## நூற்றாண்டு எழுத்தாளர்களின் ‘நினைவுத் தடங்கள்’!

நூற்றாண்டு காணும் அறிஞர்கள், எழுத்தாளர்களின் படைப்புகளை வெளியிடும் ‘நினைவுத் தடங்கள் திட்டம்’ தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் சார்பில், செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில், பங்காற்றிவரும் எழுத்தாளர் அப்பணசாமி தனது அனுபவத்தை முகநூலில் பதிவு செய்துள்ளார்.

‘பள்ளி, கல்லூரி மாணவர்கள், போட்டித் தேர்வர்கள் மற்றும் ஆய்வாளர்களின் பயன்பாட்டுக்காக ‘திராவிட மாடல் அரசு’ பல திட்டங்களை அறிவித்து, அவற்றைச் செயல்படுத்தும் வாய்ப்பினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு பாடநூல் கழகத்துக்கு வழங்கி பெருமைப்படுத்தியுள்ளார்கள். இதில், நூற்றாண்டு காணும் அறிஞர்கள், எழுத்தாளர்களுக்குச் சிறப்பு செய்யும் வண்ணம் அறிவிக்கப்பட்ட நூற்றாண்டு ஆளுமைகளுக்கு ‘நினைவுத்தடங்கள்’ வெளியிடும் திட்டமும் ஒன்று. இந்தத் திட்டத்தின் வாயிலாக, இதுவரை பேரா.அன்பழகன், தி. ஜானகிராமன், கி.ராஜநாராயணன், அழ.வள்ளியப்பா ஆகியோரின் ‘நினைவுத்தடங்கள்’ தமிழ்நாட்டின் முக்கிய எழுத்தாளர்களை தொகுப்பாசிரியர்களாகக் கொண்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் வெளியாயின. தொடர்ந்து, தமிழ்நாட்டை நாட்டின் முதன்மை மாநிலமாக உயர்த்திய முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை ஒட்டி அவரது படைப்புகளை ஆழ அகல ஆய்வு செய்து எழுத்தாளர் இமையம் அவர்களால் தொகுத்தளிக்கப்பட்ட ‘கலைஞர் படைப்புலகம்’ வெளியிடப்பட்டது.

தொடர்ந்து கு.அழகிரிசாமி, தொ.மு.சி.ரகுநாதன், ராஜம் கிருஷ்ணன், புலியூர் கேசிகன், டி.கே.சீனிவாசன், குன்றக்குடி அடிகள், ஏ.வி.பி.ஆசைத்தம்பி ஆகியோரின் ‘நினைவுத்தடங்கள்’ ஒவ்வொன்றாக வெளியிடப்படுகின்றன. எனது வாழ்நாள் பணிகளில், இது மறக்க முடியாத பணி” எனப் பதிவிட்டுள்ளார்.

## :.ப்ளாஷ்பேக்



### தேர்தல் நிதியளிப்புக் கூட்டம்!



முனைவர் இறை.கார்குழலி

1986-ஆம் ஆண்டு எனக்கு 9 வயது இருக்கும்போது, தஞ்சை திலகர் திடலில் கழகம் சார்பில் நடைபெற்ற தேர்தல் நிதியளிப்புக் கூட்டத்திற்கு, என்னுடைய தந்தை அன்றைய மாவட்ட அவைத்தலைவர் சி.இறைவன் அவர்களுடன் சென்றிருந்தேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் என்னுடைய தந்தையும் மேடையைப் பகிர்ந்து கொண்டார். உடன் மதுரை ஆதீனம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்.கணேசன், டி.ஆர்.பாலு, அன்றைய இளைஞர் அணித் துணைச் செயலாளர் திருச்சி சிவா சட்டமன்றத் துணைத் தலைவர் கணபதி மற்றும் ஆர். ஜெயபால் ஆகியோர் மேடையில் வீற்றிருந்தனர்.

**- முனைவர் இறை.கார்குழலி,**
**மேனாள் பொதுக்குழு உறுப்பினர்,**
**தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மசூலிப்பட்டினத்தில் பெரியார்!


1941-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், நீதிக்கட்சியின் நிர்வாகக்குழுக் கூட்டம் மசூலிப்பட்டினத்தில் நடைபெற்றது. தந்தை பெரியாருக்கு ரயில் நிலையத்தில் நீதிக்கட்சித் தொண்டர்களும் முஸ்லிம் லீக் அமைப்பினரும் அணிவகுப்பு மரியாதை அளித்தனர். பெரியாருக்கு எதிராக, இந்து மகாசபையினர் எதிர்ப்பு பிரச்சாரம் செய்தனர். தெலுங்கு மொழியில் வெளியிடப்பட்ட அந்தப் பிரசுரத்தை மொழிபெயர்த்து, ‘விடுதலை’யில் வெளியிட்டு அம்பலப்படுத்தினார், தந்தை பெரியார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

694

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131